# The Core and Inter-Circle of the Sri Lankan Mahidi Theatre: Presenting the Movement of Characters

# இலங்கை மகிடி அரங்கின் மையச்சுற்றும் இடைச்சுற்றும்: பாத்திரங்களின் இயங்கத்தை முன்வைத்து

**Sundaralingam Chandrakumar**

*Research Scholar (Registration Number 2300140010), Department of Performing Arts*
*Pondicherry University, Puducherry, India*
*https://orcid.org/0000-0003-0774-9666*

**சுந்தரலிங்கம் சந்திரகுமார்**
முனைவர்பட்ட ஆய்வாளர், நிகழ்த்துகலைத்துறை, நிகழ்த்துகலைப்பள்ளி
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி, இந்தியா

| *Editorial history* | *Cite this article* |
|---|---|
| **Received:** 04.01.2025<br>**Accepted:** 01.02.2025<br>**Published Online:** 10.02.2025 | Chandrakumar, S. (2025). The Core and Inter-Circle of the Sri Lankan Mahidi Theatre: Presenting the Movement of Characters. *Journal of Advanced Research and Innovation, 1*(2), 28-33.<br>DOI: https://doi.org/10.34293/jari.v1i2.281 |

**Abstract**

Mahidi is a social theatre in Sri Lanka where it is performed. It is a stage full of characters designed for the oppressed people to express their anger. The people's resistance is shown by describing the conflict between the indigenous and the arrival through the game of magic and stratagem. In the center of this Performance Space, there are objects mixed with Brahmanar, sage, and mythology. The tribes take the objects placed in it and win. Around this, the roles of government administration and roles related to society act. This study provides the events in the two layers, the relationship between them and their uniqueness, and the dialectical status of the roles. Purpose of the study: To reveal how the Performance technique is found in the central circle and the second circle in the Performance Space of the Mahidi. Research problem: In the two circles of the Performance Space of the Mahidi, the characters in the second circle only talk to the surrounding audience. Hypothesis of the study: There is no close relationship between the center of the Performance and the second circles. Research Methodology: This study uses a descriptive research approach through a qualitative research design. The research tools used in data collection are fieldwork, interviews, and participation in Performance. Secondary data include books, websites, etc.

***Keywords: Mahidi Theatre, Theatre of Oppressed, Core, Second Layer***

**ஆய்வுச் சுருக்கம்**

மகிடி இலங்கையில் ஆற்றுகை செய்யப்படுகின்ற சமூக அரங்காகும். இது ஒடுக்கப்பட்ட மக்கள் தமது கோபத்தை வெளிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட அங்கதம் நிறைந்த ஆற்றுகையைக் கொண்டது. வந்தோர் x இருந்தோர் தகராறை மந்திரதந்திர விளையாட்டினூடாக வெளிப்படுத்துவதன்மூலம் மக்களின் எதிர்ப்புணர்வு காட்டப்படுகின்றது. இந்த மகிடி ஆற்றுகை வெளியின் மையத்தில் பிராணர், முனிவர், தொன்மம் கலந்த விடயங்கள் உள்ளன. அதில் வைக்கப்பட்டுள்ள மந்திரக்கட்டுள்ள பொருட்களைப் பழங்குடிகள் எடுத்து வெற்றி பெறுவர். இதனைச்

சுற்றி அரச நிர்வாகப் பாத்திரங்களும், சமூகத்துடன் தொடர்புடைய பாத்திரங்களும் செயற்படும். இவ்வாய்வில் இரண்டு சுற்றிலும் நடப்பவையும், இரண்டுக்கும் இடையிலான தொடர்பும் அதன் தனித்துவங்களும், பாத்திரங்களின் இயங்கியல் நிலையும் தரப்படுகின்றது. ஆய்வின் நோக்கம்: மகிடி அரங்கில் மையச்சுற்றிலும், இரண்டாவது சுற்றிலும் ஆற்றுகை நுட்பம் காணப்படும் முறையை வெளிக்கொணர்தல். ஆய்வுப் பிரச்சினை: மகிடி ஆற்றுகை வெளியில் இரண்டு சுற்றிலும் இரண்டாம் சுற்றில் உள்ள பாத்திரங்களே சுற்றியிருக்கும் பார்வையாளர்களுடன் உரையாடுவர். ஆய்வின் கருதுகோள்: மகிடியின் மையம், இரண்டாம் சுற்றுக்களுக்கு இடையில் நெருக்கமான தொடர்பு இல்லை. ஆய்வு முறையியல்: இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு வடிவமைப்பினூடாக விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது. தகவல் சேகரிப்பில் ஆய்வுக் கருவியாக களப்பயணம், நேர்காணல், ஆற்றுகையில் பங்குகொண்டமை அமைகின்றது. இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், இணையத்தளங்கள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன.
**திறவுச் சொற்கள்:** மகிடி அரங்கு, ஒடுக்கப்பட்ட மக்களது அரங்கு, மையச்சுற்று, இரண்டாம் சுற்று.

**முன்னுரை**

மகிடி திறந்தவெளி ஆடுகளத்தில் ஆற்றுகை செய்யப்படும் கலைவடிவமாகும். இது கால் ஏக்கர் பரப்பைக்கொண்ட நீள்சதுர அரங்க வெளியாகும். இதனைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் கயிறுக்கு வெளியில் நின்று ஊர் மக்கள் மகிடியைப் பார்த்துப் பங்குகொள்வர். இவ்வெளியின் மையத்தில் முப்பது அடி உயரமான கமுக மரம் கொடிக்கம்பமாக நாட்டப்பட்டும். அதற்கு அருகில் மந்திரக்கட்டுள்ள பொருள் போல கும்பம், மடை போன்றன வைத்து ஆற்றுகைக்கானதாக மாற்றப்படும். இதனை பிராமணர், முனிவர்கள் வைக்க மலையாளத்தார், பழங்குடிகள் ஆகியோர் மந்திர விளையாட்டினூடாக எடுத்து வெற்றிபெறுவர். அடுத்த சுற்றில் உடையார், விதானை, போலீஸ், வகுத்தையாமார், பறங்கியன், பறங்கிச்சி முதலான பாத்திரங்கள் அங்கத நிலையில் காட்டப்பட்டு, அவர்களது அதிகார மேலாண்மை கீழ்நிலைப்படுத்தப்படும். பார்வையாளர்கள் இப்பாத்திரங்களுடன் உரையாடி சமூகப் பிரச்சினைகளை நகைச்சுவையுடன் பரிமாறிக்கொள்வர். இந்த மகிடி ஆற்றுகை மக்கள் மத்தியில் அதிகாரத்தால் ஏற்பட்ட ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துக்களை அங்கத நிலையில் கீழ்நிலைப்படுத்தி விவாதிப்பதற்காக உருவாக்கப்பட்ட சமூக அரசியல் அரங்கு (Social Satire Theatre) ஆகும். இதில் மையச்சுற்று, அடுத்துள்ள சுற்று என மகிடி ஆற்றுநர்களால் வடிவமைக்கப்பட்ட முறை அரங்கியலில் தனித்துவமானது. சமூக நடைமுறையில் உள்ள அதிகாரப் பாத்திரங்கள் இணைக்கப்பட்டு கேலிஇ கிண்டல் ஊடாகப் பார்வையாளர்களுடன் உரையாடும் நிலை போன்றன பாத்திர இயங்கியலில் (Character Dynamics) குறிப்பிடத்தக்கது.

**கண்டுபிடிப்பும் கலந்துரையாடலும்**

இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டில் ஆற்றுகை செய்யப்படும் மகிடி ஆற்றுகை இயங்கியல் (Dynamics of Mahidi Performance) தனித்துவமானது. மந்திரதந்திர விளையாட்டின் அடிப்படையில் அமைந்தாலும், இலங்கைத் தமிழ் அரங்கின் தனித்துவமான புதிய ஆற்றுகை நுட்பங்களைக் கொண்டுள்ளது. முன்னர் கூறியதன்படி, மகிடி திறந்தவெளியில் கால் ஏக்கர் சுற்றளவில் கயிறு கட்டி அதற்கு வெளியில் பார்வையாளர்கள் சுற்றி நின்று பார்ப்பர். அதன் மையத்தில் கொடிக்கம்பம் நட்டுக் கும்பம் வைத்து, அதனைச் சுற்றி அல்லது நேராக பந்தல் அமைத்து அதன் மையத்திலும், அதனைச் சுற்றியும் ஆற்றுகை செய்யப்படும். இதுவே மகிடியின் அடிப்படையான ஆற்றுகை சூத்திர இயங்கியல் நிலையாகும். இதனை அவரவர் எடுத்துத் தத்தமது சாதி, வர்க்கம், மத நிலைகளில் ஏற்படும் அதிகார எதிர்ப்பை விவாதிக்கப் படைத்துள்ளனர். மகிடி ஆற்றுகை நிலையில் தளர்நிலையாகக் காணப்படுவதால், எக்காலத்திலும் இதற்கான படைப்பாக்கத்தையும், சிந்தனையையும் சேர்த்து ஆற்றுகை செய்ய இடமுண்டு.

**மையச்சுற்று**

மகிடி அரங்கின் ஆற்றுகைச் செயற்பாடு மையம், இடை, விளிம்பு என்ற நிலையில் அணுகினால் அதன் புரிதல் தனித்துவமாக அமையும். மையத்தில் என்ன இயங்குநிலை உள்ளது என்பதன் அறிதல் அவசியம். மையத்தில் செயற்படுவோர் அதிகாரப் பாத்திரங்களாகவும், மக்களது இடத்தைத் தொன்மத்தால் பிடித்து வைத்திருப்பவர்களாகவும், இதற்காக மந்திரக்கட்டுள்ள கும்பம் வைப்பதான செயற்பாட்டைச் செய்பவர்களாகவும் உள்ளனர். கொடிக்கம்பம், கும்பம், மடை ஆகியன வைக்கப்பட்டுள்ளன. தெய்வப் பாத்திரங்களும் இதனுடன் தொடர்புகொள்கின்றன.

முனிவர், பிராமணர் போன்றோர் மையத்தில் கொடிக்கம்பம் அமைத்து, கும்பத்துடன் இருப்பர். இவர்கள் கொடிக்கம்பத்தையும், கும்பத்தையும் தொன்மம், நம்பிக்கையுடன் கட்டமைத்து நிறுவன மந்திரத்தைப் பயன்படுத்தி பழங்குடிகளின் நிலத்தினுள் வந்து குடிகொண்டுள்ளனர். அதனைத் தமது இடமாக மாற்றப் பண்பாட்டு நடைமுறைகளை இணைத்து, தொன்மத்துடன் பயம் காட்டி அதன் உணர்வுடன் மக்களை வைத்திருப்பது என்பதாக உள்ளது. பிறரைப் பயம் காட்டவும், தம்மைத் தக்கவைக்கவும் தொன்ம நம்பிக்கையை இணைப்பது புராணங்களின் முறைமையாகும். மகிடியில் பிராமணியத் தன்மையுடன் தவம், வேள்வி செய்வது தொடர்பான சொல்லாடலைப் பயன்படுத்துவது உள்ளது. கோயில் கைமணியின் பயன்பாடு, பொட்டுத் திருநீறு வைத்தல், பூணூல் அணிதல், கொடுக்குக் கட்டுதல், செம்பில் தண்ணீர் வைத்திருத்தல் என்பன காட்டப்படுகின்றன. இதனூடாகத் தம்மைத்தாம் உயர்வாக்கிப் பிறரை அடக்குவதும், பிறரது நிலத்தைத் தன்வயப்படுத்திப் பயம் காட்டுவதான செயற்பாடு போல மகிடியின் மைத்தில் உள்ள இயங்கியல் உள்ளது. அதிகார மையத்தில் கடவுளின் பெயரால் மற்றவர்களை மந்திரத்தால் நிறுவன நிலைப்பட்டதாகக் காட்டுவது தாம் புனிதமானவர்கள், தீட்டு இல்லாதவர்கள் என்பதைக் கட்டமைப்பதும் செய்து காட்டப்படும்.

வந்தாறுமூலை மகிடியில் கொடிக்கம்பத்தடியில் பிராமணப் பிள்ளைகள் இருப்பர். வோசடா[1] முனிக்குத் தனிப் பந்தல் இருக்கும். இவர்கள் மையத்துடன்தான் தொடர்பு கொள்கின்றனர். சந்திவெளியில் முனிவர்கள் மடுவுக்குள் இருந்து தவம் செய்யும் பொழுது பழங்குடிகளுடன் (குறவர்களுடன்) மோதுவதற்கு மடுவுக்கு வெளியில் வருவதும் உள்ளே போவதுமாக செயற்படுவர். குறவர்களின் மனைவியை தன்பக்கம் எடுத்து ஓடி ஒளிவது இந்த மடுவுகுள்ளேயாகும். வந்தாறுமூலையில் முனிவர்கள் வெளியில் இருந்து தாளத்துக்கு நகைச்சுவையாக வந்து மையத்தில் உள்ள கொடிக்கம்பத்தையும்இ கும்பத்தையும் ஆசீர்வதித்துப் பின்னர் பந்தல்களில் இருப்பதாக அமைகின்றது. சீலாமுனை, வந்தாறுமூலை, திராய்மடு மாதிரி முனிவர்கள் வெளியில் இருந்து வருவது, காளி இறுதியில் வருவது என உள்ளது. சீலாமுனையில் தலைமைப் பிராமணர் கொடிக்கம்பத்திற்கு அருகில் உள்ள சுழலும் கொடிக்கம்பத்திற்குப் பாதுகாப்பாகவும், கஞ்சாமுனி முனிவர் அதற்கு முன்னால் உள்ள அசையும் வட்டாமடைக்கு அருகிலும் இருந்து தமக்கான எதிர்ப்பைக் காட்டுவர். கொக்குவில் பிரதேசத்தில் ஆடப்படுகின்ற மகிடியில் ஓதமுனிவர் கம்பத்தின் அருகில் இருந்து காவல் காப்பதும் எடுக்கவிடாது தடுப்பதுமாக அமைகின்றது. கம்பத்திற்கு முன்னால் பிராமணன், பிராமணச்சி மடுவுக்குள் இருந்து எதிர்த்து வித்தை காட்டுவதும் இவ்வூரில் நடக்கின்றது. இவ்வாறு ஊருக்கு ஊர் தனித்துவமானதாக மகிடி ஆற்றுகை செய்யப்படுகின்றது.

**இடைச்சுற்று**

மையத்தைச் சுற்றியுள்ள செயற்பாடு (Function) பல புரிதல்களைத் தருகின்றன. இரண்டு நிலைகளில் இயங்குபவை, ஒன்று மையத்துடன் தொடர்புபட்ட மையத்திற்கு அடுத்ததாக உள்ள பாத்திரங்களான குறவன் குறத்தி, ஒண்டிப்புலி, அவரது தாய், வேடன் வேடுவிச்சி (பழங்குடிகளும்,

1 வோசடா: இதனை ஓதம் என்று கூறுவது வழக்கம். ஓதம் என்பது ஆண்களுக்குக் காணப்படும் வீங்கிய விதை. முனிக்கு வீங்கிய விதை உள்ளதாக மகிடியில் காட்டப்படுவது கவனத்திற்குரியது.

மலையாளத்தாரும்) என்று இருந்தது. இரண்டாவது காலனிய நிர்வாகக் கட்டமைப்பின் வலுவாக்கம் வந்த பிறகு வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி, பறங்கியன், பறங்கிச்சி ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். அதனை தொடர்புபட்ட அரச நிர்வாகத்திற்குள் இருக்கும் உடையார், விதானை, போலீஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். பின்னர் நிதி தொடர்பான சுரண்டலைச் செய்யும் நுண்கடன், வதந்தி முதலான பாத்திரங்கள் கற்பனையுடன் உருவாக்கப்பட்டுள்ளன. அடிப்படையான மகிடி ஆற்றுகைச் சூத்திரத்தினுள் அதிகார மையத்தகர்ப்பைச் செய்வதவதற்கு இந்த ஆற்றுகை கையாளப்பட்டுக்கள்ளது. இதற்கு அங்கதம் பிரதான கருவியாகும். அடிப்படையான ஆற்றுகைக் கட்டமைப்புக் காணப்பட்டாலும் மகிடி எந்தெந்தச் சமூகம் எடுத்து ஆற்றுகைச் செய்கின்றதோ அந்தந்தச் சமூகப் பாத்திரங்களையும், அதன் நடைமுறையையும் படைப்பாக்கம் செய்வதற்கான இடமுள்ளது. இதற்கு குறித்தகாலம், இடம், சமூகம், படைப்பாக்கச் சிந்தனை அச்சமூகத்தின் ஆற்றுகை மதிப்பீடு போன்றவற்றை அடிப்படையாக அமைகின்றது. பழங்கால மகிடி ஆற்றுகையும், சமகால மகிடி ஆற்றுகை வடிவத்திற்கும் பாத்திர இணைப்பு வித்தியாசங்கள் உள்ளன.

சமகால நபர்கள் தமக்குள்ளும் பார்ப்போருக்குள்ளும் தொடர்பை வைத்திருப்பர். பிரதான கதையுடனும், அதன் மந்திர விளையாட்டுடனும் தொடர்புபடமாட்டார்கள். மூலக்கதைக்குச் (வந்தோர் இருந்தோர் தகராறிலுள்ள மந்திரதந்திர விளையாட்டுக்குக் கதைக்குள்) சமாந்தரமாகச் சமகாலத்துடன் தொடர்புடைய அம்சங்களின் செயற்பாடுகளும், பாத்திரவார்ப்புக்களும் தொழிற்படும். சமகால நபர்களை மையப்படுத்திய பாத்திரங்களின் இயக்கத்திற்கும் பார்ப்போருக்கும் நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. சமகால நபர்களின் இயக்கத்திற்கும் (Movement of Contemporary Person) மூலக்கதைக்குமான தொடர்பு இல்லை. சில ஊர்களில் நடைபெறும் மகிடியில் இவ்வாறான தொடர்பே இல்லை. மூலக்கதையிலுள்ள வந்தோர் இருந்தோருக்கு, மந்திரதந்திர விளையாட்டு போன்றவற்றுடன் தொடர்பு இருக்காது. இவர்கள் மந்திர விளையாட்டில் ஈடுபட்டமாட்டார்கள். இதனால், சமகாலப் பாத்திரங்கள் மூலக்கதையுடன் சில ஊர்களில் தொடர்புபடுவதாகவும், சில ஊர்களில் தொடர்பற்றதாகவும் கட்டமைத்துள்ளனர்.

**நாங்கள் மகிடிச் செய்யும்போது மையத்திலுள்ள கொடிக்கம்பத்திற்கு அருகில் உடையாரைச் செல்ல விடமாட்டோம்** (நேர்காணல், 18.05.2024) என்று பா. கமலநாதனும், **பறங்கியன் பறங்கிச்சி கொடிக்கம்பம் இருக்கும் இடத்திற்கு வந்தால் அங்குள்ள சாம்பலாண்டிகள் சாம்பலை எறிந்து விடுவர்** (நேர்காணல், 10.08.2024) என்று செ.புலேந்திரனும், **மந்திர விளையாட்டுக்களை உடையார், போலீஸ், விதானை ஆகியோர் செய்யமாட்டார்கள். அவர்கள் மக்களுடன்தான் உரையாடுவர். முனிவருக்கும், குறவர்களுக்குமே மந்திர விளையாட்டு நடக்கும்** (நேர்காணல், 10.10.2024) என்று செ.சந்திரகுமாரும் கூறுவது கவனத்திற்குரியது.

மகிடியின் மூலக்கதை (Core Story) நகர்விற்கும் சமகாலப் பாத்திரங்களுக்குமான தொடர் பின்வருமாறு காணப்படுகின்றது.

சமகாலத்துடன் தொடர்புடைய பாத்திரங்கள் பார்வையாளர்களுக்கு மூலக்கதையின் நகர்வைச் சித்திரிப்பவர்களாகச் செயற்படுவர்.

- இப்பாத்திரங்கள் அங்கதத்தினூடாகச் சமகால சமூகப் பிரச்சினைகள், சமூக நடைமுறைகள், வாழ்வியல் அம்சங்கள், பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றை விளக்குபவர்களாக இருப்பர். இதனால், இவர்கள் அங்கதர்களாக வார்க்கப்பட்டுள்ளனர்.
- இவர்கள் பார்வையாளர்களுடன் உரையாடலை ஏற்படுத்தும் பிரதான மூலப் பாத்திரங்களாக அமைவர்.
- இவர்கள் அங்கதர்களாக மூலக்கதையை விபரிப்பவர்கள்.
- இவர்கள் மையக்கதை ஓட்டத்துடன் இணையமாட்டார்கள். மையத்திற்கு அடுத்த அடுக்கிலேயே (இரண்டாவது சுற்றில்) செயற்படுகின்றனர். மையத்திற்கும் சுற்றி நிற்கும் பார்ப்போருக்கும் இடையில் செயற்படுகின்றனர். மையக்கதையில் நடக்கும் மந்திரதந்திர விளையாட்டில், ஈடுபடுவது, கும்பம்

எடுப்பது போன்றவற்றில் ஈடுபடுவதில்லை.

இப்பாத்திரங்களில் உடையார், விதானை, போலீஸ், வெள்ளைக்காரன் வெள்ளைக்காரி, குறவன் குறத்தி, நடத்துநர், பறங்கியன், பறங்கிச்சி, நுண்கடன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் செயற்பாட்டில் இருந்து மற்றுமொரு கருத்தியலையும் உருவாக்கலாம். முன்னர் குறிப்பிட்டது போல பழங்குடிகள் கும்பம் எடுத்து வெல்வது, தமது இடத்தைத் தன்னகப்படுத்துவது நிலவும்.

### பார்வையாளராக உள்நின்று இயங்கும் ஆற்றுநர்

மந்திரதந்திர விளையாட்டில் ஈடுபடாத சமகால விடயங்களுடன் தொடர்புபட்ட பாத்திரவாக்கத்தையும் அதன் செயற்பாட்டையும் உள்நின்று இயங்கும் பார்ப்போர் என்று கூறலாம். இதனால்தான் இவர்கள் மகிடியைப் பற்றி விபரிப்பவர்களாக, எடுத்துரைப்பாளராக, நடத்துநராகக் காணப்படுகின்றார்கள். இங்கு மூலக்கதையும் சமகாலச் சம்பவங்களின் நிகழ்வும் சமனாக நடக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. இப்பாத்திரங்கள் உள்நின்று இயங்கும் பார்வையாளர்கள் (Indor Audience) போலச் செயற்படுவது நிலவுகின்றது. மையத்தில் வந்தோர் இருந்தோர் மத்தியில் மந்திரதந்திர விளையாட்டுக்கள் நடக்கும்போது பார்ப்போர் போல அவதானித்து வெளியில் உள்ளவர்களுடன் பகிர்கின்றனர், தாமும் சமகால விடயங்களை பார்வையார்களுடன் உரையாடி, விவாதித்து அங்கத உத்தியுடன் இணைகின்றனர். மையத்தில் நடப்பதை அவதானித்து யாரு வருகின்றார்கள், எங்கிருந்து வருகின்றார்கள், யார் இருக்கின்றார்கள், எங்க போகின்றார்கள், என்ன நடத்துகின்றார்கள், இவர்கள் எல்லோரும் யார், எழுதிப்போடுவன் போன்ற நிலையில் உரையாடுவது மேம்படுகின்றது. இந்த வினாக்களை மையத்திலுள்ளவர்களை நோக்கிக் கேட்டாலும், மையத்தில் இருப்பவர்கள் (பிராமணர், முனிவர்) பதிலளிப்பதில்லை. சுயமாகவே கேட்டுக்கொள்வதே நிலவுகின்றது. இப்பாத்திரங்கள் மகிடியை உள்ளிருந்து பார்க்கின்ற பார்ப்போர் போலவும், நிகழ்விடத்திற்குள் இருந்து மூலக்கதையைப் பார்த்து நகைத்து எழுதி வியாக்கியானிக்கும் நபர்கள் போலவும் செயற்படுபவர்களாக உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட அரங்க நுட்பமே மகிடியின் முதன்மையானது. மற்றைய அரங்கில் இருந்து வித்தியாசப்படும் தனித்துவமான ஆற்றுகைப் பண்பும் ஆகும். ஆற்றுகை வெளியில் நிற்கும் பார்வையாளர்கள் தொடர்ந்து இயங்குவதாகக் காணப்படும். சமகாலப் பாத்திரங்கள் (இரண்டாவது சுற்றில் செயற்படும்) மையத்தை விளக்குவது, அங்கதப்படுத்துவது, அதிகாரத்தைத் தாமாகவே கீழ்நிலைப்படுத்துவது ஆகிய செயற்பாட்டில் ஈடுபடுவதும், சுற்றியிருக்கும் பார்ப்போருடன் உரையாடுவதுமாகக் காணப்படுகின்றன.

### பன்முக ஆற்றுகை

இது ஒரேதளத்தில் ஒரேநேரத்தில் பாத்திரங்கள் வந்து அத்தளத்திலேயே ஆற்றுகை முடியும்வரை இருந்து தொடர்ந்து ஆற்றுகை செய்துவதும், ஒரேநேரத்தில் சுற்றியுள்ள பார்ப்போருடன் உரையாடி நடித்துக்காட்டுவதும், மையத்திலுள்ள மந்திரதந்திர விளையாட்டுக்களைச் செய்வதுமான பன்முக ஆற்றுகைமுறை மகிடியின் தனித்துவத்தைக் காட்டுகின்றது.

- ஆற்றுநர் ஆடுகளத்தில் ஆற்றுகை செய்து ஆற்றுகை முழுவதும் ஆக்கத்திறன், படைப்பாற்றல், புத்தளித்தல் போன்றவற்றுடன் உடல், குரலைப் பயன்படுத்தி வெளிக்கமைய காட்சியை உருவாக்கிச் செயற்படுவது.
- ஆற்றுநர்கள் ஒரேநேரத்தில் ஒரேதளத்தில் பல்வேறு சிறுசிறு ஆற்றுகைகளைச் செய்யும் முழுப்பரிமாற்றத்தையும் மையப்படுத்திய பன்முக ஆற்றுகையாகக் காணப்படுவது.

என அமைகின்றது. ஒரேநரத்தில் ஒரேஆடுகளத்தில் நடைபெறும் பன்மைத்துவச் செயற்பாடு, மகிடியை உருவாக்கிய ஆற்றுநர்கள் தமது சொந்தப் பண்பாட்டில் இருந்து தமது புலமைத்துவ வெளிப்பாட்டுடன் திட்டமிட்டு வடிவமைத்துள்ளனர். இதற்குச் சடங்குக் கோயில்களில் ஒரே தளத்தில்

ஒரே நேரத்தில் பன்முகச் சடங்கு நிகழ்வுகள் துணை புரிந்துள்ளன.

**முடிவுரை**

மகிடி ஆற்றுகையில் வெளிப்படும் மையமும், அதற்கு அடுத்துச் செயற்படும் சுற்றும் தனித்துவமான அரங்க உத்தியை வெளிப்படுத்துகின்றது. இரண்டு சுற்றிலும் செயற்படும் பாத்திரங்கள் அதிகார மேலாண்மைப் பாத்திரங்களாகவும், அவர்கள் கேலிக்கைக்கு உட்படுத்தப்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். மையத்தில் செயற்படும் பாத்திரங்களுக்கும், அடுத்த சுற்றில் செயற்படும் பாத்திரங்களுக்குமான தொடர்பும் வித்தியாசமானது. இவர்களது பொருண்மையிலும் தனித்துவமும் வேறுபாடும் உள்ளது. மகிடியை ஆற்றுகை செய்யும் மக்கள் காலத்திற்குக் காலம், இடத்திற்கிடம் தமது கற்பனை, சிந்தனைக்கு ஏற்ப புதிய புதிய பாத்திரங்களை இணைத்து அங்கத நிலையில் விபரிப்பது மகிடியின் சிறப்பம்சமாகும்.

**நேர்காணல்**

1. கமலநாதன், பா. வயது 76. ஒப்பனைக்கலைஞர், மகிடி நடத்துநர். கொம்மாதுறை, மட்டக்களப்பு, இலங்கை. 18.05.2024.
2. புலேந்திரன், செ. வயது 47. சிற்கக்கலைஞர், மகிடிக் கூத்துக்கலைஞர். ஆரையம்பதி. மட்டக்களப்பு. இலங்கை. 10.08.2024.
3. சந்திரகுமார், செ. வயது 67. மகிடியில் உடையாருக்கு நிகழ்த்தியவர், வந்தாறுமூலை. இலங்கை. 10.10.2024,

**Interviewer**

1. Kamalanathan, P. Age 76. Makeup Artist, Director of Mahidi, Kommathurai. Batticaloa. Sri Lanka. 18.05.2024.
2. Pulendran, S. Age 47. Sculpture Artist, Mahidi Artist, Araiyampathi, Batticaloa. Sri Lanka. 10.08.2024.
3. Chandrakumar, S. Age 67. Performer of Udaiyar. Vantharumoolai. Sri Lanka. 10.10.2024.